

மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.வுக்குட்பட்ட மேற்கு சட்டமன்றத் தொகுதி பெத்தானியாபுரம் பகுதி 66வது வட்ட தி.மு.க. சார்பில் கோச்சடையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு படிப்பகத்தை மாவட்டச் செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் தனச்செல்வம், பகுதி செயலாளர் மதி வெங்கடேஷ், மாநில கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் வீரகணேசன், வட்டச் செயலாளர் பாலமுருகன், கழக நிர்வாகிகள் ஜே.கருப்பு, ஜே.மரியா உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பங்கேற்றனர்

## மாநிலங்களுக்கு இடையிலான 64வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில்

# ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் வென்றது தமிழ்நாடு தடகள அணி!

### பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினிடம் வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக.27-

**துணை முதலமைச்சர். உதயநிதி ஸ்டாலின் அவர்களை, 64-வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் வென்ற தமிழ் நாடு தடகள அணியின் தங்கப்பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள் நேற்று முன்தினம் (25.8.2025) நேரில் சந் தித்து வாழ்த்துப் பெற்றனர்.**



சென்னைநேருவிளையாட்டரங்கில் 20.8.2025 முதல் 24.8.2025 வரை மாநிலங்களுக்கிடையேயான 64 வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகள் நடைபெற்றது. இந்தப் போட்டிகளில் தமிழ்நாடு தடகள அணி ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் வென்றது.

பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 900 தடகள விளையாட்டு வீரர், வீராங் கனைகள் கலந்து கொண்ட தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில் தமிழ் நாட்டைச் சேர்ந்த 80 தடகள விளை யாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

**11 தங்கப் பதக்கங்கள்**

பெண்களுக்கான 100 மற்றும் 200 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் செல்வி சே. தனலட்சுமி 2 தங்கப் பதக்கங்களை யும், ஆண்களுக்கான 100 மீட்டர் ஓட் டப் பந்தயத்தில் செ. தமிழரசு, 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தெ. விஷால், உயரம் தாண்டுதல் போட்டியில் செல்வி கி. கோபிகா, தடியூன்றி தாண் டுதல் போட்டியில் செல்வி இ.பிரனிகா, க. ரீகன் மற்றும் மு. கௌதம், டெக்லத் தான் போட்டியில் எஸ். ஸ்டாலின் ஜோஸ் என வீரர், வீராங்கனைகள் தனிநபர் பிரிவில் மொத்தம் 9 தங்கப் பதக்கங்களை வென்றனர்.

மேலும், 4x100 மீட்டர் ஓட்டப்பந்த யத்தில் பெண்கள் பிரிவில் செல்வி ரா. பவித்ரா, செல்வி ம. ஏஞ்சல் சில்வியா, செல்வி ரா. அபிநயா, செல்வி சே. தன லட்சுமி ஆகியோர் கொண்ட குழுவின ரும், 4x400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் ஆண்கள் பிரிவில் த. சந்தோஷ், ர. ராஜேஷ், த. யோகேஷ், தெ.விஷால் ஆகியோர் கொண்ட குழுவினரும் தலா ஒரு தங்கப் பதக்கம் வென்றனர்.

**9 வெள்ளிப் பதக்கங்கள்**

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் செல்வி ரா. அபிநயா, 200 மீட்டர் ஓட் டப் பந்தயத்தில் க.ராகுல் குமார், 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில்

ர. ராஜேஷ், 110 MTH தடை ஓட்டம் போட்டியில் ரா. மானவ், உயரம் தாண் டுதல் போட்டியில் ஜோ. ஆதர்ஷன் ராம், 100 மீட்டர் தடை ஓட்டம் போட்டி யில் செல்வி கொ. நந்தினி, 400 மீட்டர் தடை ஓட்டம் போட்டியில் செல்வி மை. ஒலிம்பா ஸ்டெஃபி, ஹெப்டத்லான் போட்டியில் செல்வி ச. தீபிகா ஆகிய வீரர், வீராங்கனைகள் தனிப்பிரிவில் மொத்தம் 8 வெள்ளி பதக்கங்களை வென்றனர்.

மேலும், 4x100 மீட்டர் ஓட்டப்பந்த யத்தில் ஆண்கள் பிரிவில் சி. அருண் குமார், க. ராகுல், ம. வருண், செ. தமிழரசு, வீ. நவீன் ஆகியோர் கொண்ட குழுவி னர் ஒரு வெள்ளி பதக்கம் வென்றனர்.

**11 வெண்கலப் பதக்கங்கள்**

100 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் க. ராகுல் குமார், 10,000 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் திருமதி த.லதா, 3,000 மீட்டர் ஸ்டீபில் சேஸ் போட்டியில் செல்வி எம். அனுபிரியா, 20 கி.மீ நடை ஓட்டம் போட்டியில் செல்வி மு. மோகவி, தடியூன்றி தாண்டுதல் போட் டியில் லோ. கமல் மற்றும் செல்வி த. சத்யா, மும்முறை தாண்டுதல் போட்டி யில் சி. பிரவீன், நீளம் தாண்டுதல் போட்டியில் ரா. சுவாமி மற்றும் செல்வி அ.ஷெரின் ஆகிய வீரர், வீராங் கனைகள் தனிப்பிரிவில் மொத்தம் 9 வெண்கலப் பதக்கங்களை வென்ற னர்.

மேலும், 4x400 மீட்டர் ஓட்டப்பந்த யத்தில் பெண்கள் பிரிவில் செல்வி மை. ஒலிம்பா, செல்வி ச. நிதாலியா, செல்வி வெ. தேசிகா, செல்வி ரா. வித்யா ஆகி யோர் கொண்ட குழுவினரும், 4x400 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் கலப்பு பிரி வில் அ. சுராஜ், செல்வி வெ. தேசிகா, லெ. அஸ்வின், செல்வி ச.நிதாலியா, த. யோகேஷ், செல்வி ரா. ஹர்ஷிதா ஆகியோர் கொண்ட குழுவினரும் தலா ஒரு வெண்கலப் பதக்கம் வென்றனர்.

இன்று துணை முதலமைச்சர் அவர் களை சந்தித்த பதக்கம் வென்ற வீரர், வீராங்கனைகள், முதலமைச்சர் அவர் கள் தமிழ்நாட்டில் விளையாட்டினை மேம்படுத்துவதற்காக வேலைவாய்ப் பில் இடஒதுக்கீடு, போட்டிகளில் கலந்து கொள்ள நிதியுதவி, போக்குவரத்து செலவு, உதவித்தொகை, விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி உள் ளிட்ட பல்வேறு உதவிகளை தொடர்ந்து வழங்குவதால் தாங்கள் 64வது தேசிய சீனியர் தடகளப் போட்டிகளில் ஒட்டு மொத்த சாம்பியன்ஷிப் வென்றுள்ளதா கவும், இதற்காக முதலமைச்சர் அவர் களுக்கும், துணை முதலமைச்சர் அவர் களுக்கும் நன்றியை தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு தடகள சங்கத்தின் செயலாளர் திருமதி சொ.லதா, மூத்த துணை செயலாளர் க.புகழேந்தி, தட கள பயிற்சியாளர் ஜெ.பிரேம் ஆனந்த் ஆகியோர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்க விழாவை காணொளி காட்சி வாயிலாக துவக்கி வைத்தார். இதனைத் தொடர்ந்து விழுப்புரம் நகரம், நாப்பாளையத் தெரு, ஸ்ரீ நடராசா நடுநிலைப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவு திட்ட விரிவாக்க விழாவை விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன், விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், காங்கிரஸ் மாநிலத் தலைவர் செல்வ பெருந்தகை எம்.எல்.ஏ, ஆகியோர் கலந்து கொண்டு துவக்கி வைத்தார்கள். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்ட கல்வி அலுவலர் அறிவழகன், நகராட்சி ஆணையர் வசந்தி, நகர்மன்ற தலைவர் தமிழ்ச்செல்வி பிரபு, நகர கழக பொறுப்பாளர் எஸ்.வெற்றிவேல் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (26.08.2025) சென்னை மயிலாப்பூர் புனித சூசையப்பர் தொடக்கப்பள்ளியில் நகரப் பகுதியில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கத்தை துவக்கி வைத்ததை தொடர்ந்து நெல்லை மாவட்டம் பாளை செவன் டாலர் தொடக்கப்பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு பங்கேற்று, மாவட்ட ஆட்சியர் மரு.இரா.சுகுமார், நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் ராமகிருஷ்ணன், ஆணையாளர் மரு.மோனிகா ராணா, துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் மாணவ, மாணவிகளுக்கு காலை உணவினை வழங்கினார்.

## சட்ட மசோதாக்களுக்கான கால நிர்ணயம்

# தமிழ்நாடு அரசின் வாதத்துக்கு பதில் என்ன?

### ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் சரமாரி கேள்வி!

புதுடெல்லி, ஆக.27-

சட்ட மசோதாக்களுக்கான கால நிர்ணயம் தொடர்பான வழக்கில் தமிழ்நாடு அரசின் வாதத் துக்கு பதில் என்ன என்று ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.



சட்ட மசோதாக்களுக்கான கால நிர்ணயம் மீது குடியரசுத் தலைவர் கேள்வி எழுப்பிய வழக் கில் நேற்று மீண்டும் விசாரணை நடைபெற்றது. நேற்றுடன் ஒன் றிய அரசு தரப்பு வாதங்களை முடிக்க வேண்டும் என்று உச்சநீதி மன்றம் உத்தரவிட்டிருந்தது. இந் நிலையில், நேற்றைய வழக்கு விசா ரணையின்போது, ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் அடுக்க டுக்கான கேள்விகளை எழுப்பி யது.

இரண்டாவதாக ஒரு மசோதா நிறைவேற்றி அனுப்பினால் அதனை ஆளுநர் திருப்பி அனுப்ப முடியுமா? ஆளுநருக்கு வீட்டோ அதிகாரம் உள்ளதா? மாநில அரசு நிறைவேற்றிய மசோதாவை ஒன்றிய அரசு திருப்பி அனுப்ப இயலுமா? அதன் விளைவுகள் என்ன என்று நீதிமன்றம் கேள்வி எழுப்பியது. 2வது முறையாக நிறைவேற்றி அனுப்பும் மசோ தாவை ஆளுநர் குடியரசுத் தலை வருக்கு அனுப்ப இயலாது. ஒப்பு தல் அளிப்பதை தவிர வேறு வழி இல்லை என்ற தமிழ்நாடு அரசின் வாதத்துக்கு என்ன பதில்? என்றும் ஒன்றிய அரசுக்கு உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. போர் போன்ற அவசர நிலை காலங்களில் வேண் டுமானால் தேசிய ஒற் றுமை, ஒருமைப்பாடு என்ற அடிப்படையில் ஒன்றிய அரசு மாநில விவகாரங்களில் தலை யிடும் அதிகாரம் உள் ளது.

ஆனால் சாதாரண நேரங்களில் எப்படி தலையிட முடியும்? என்று உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

குடியரசு தலைவர் ஒன்றிய அமைச்சரவையின் ஆலோசனை படி செயல்படுவது போல் மாநில அமைச்சரவையின் ஆலோச னைக்கு ஆளுநர் கட்டுப்பட்டவர் தானே? என்று உச்சநீதிமன்ற நீதி பதிகள் தெரிவித்தனர்.

ஆளுநர் மசோதாவை ஏன் நிறுத்தி வைத்துள்ளார் என்று நீதி மன்றம் கேள்வி கேட்கலாம் என்றும் நீதிபதிகள் தெரிவித்தனர்.

# திருவாரூர் மத்திய பல்கலைக் கழகத்தில் 10வது பட்டமளிப்பு விழா!

### குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்கிறார்!

திருவாரூர், ஆக. 27 –

திருவாரூர் மாவட்டம் நீலக்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு மத்திய மத் திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்டமளிப்பு விழா 2025 செப்டம்பர் 3 ஆம் தேதி அன்று நடைபெற உள்ளது. பல்கலைக்கழகத்தின் மாண்பமை துணைவேந்தராக பேரா சிரியர் மு.கிருஷ்ணன் சிறப்புடன் செயலாற்றி வருகிறார்.

பட்டமளிப்பு விழாவில் இந்திய குடியரசு தலைவர் மற்றும் தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் மேன் மையர் திருமதி திரௌபதி முர்மு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களது சாத னைத்திட்டமான தமிழ்நாடு மத்திய பல்கலைக்கழகத்தின் பத்தாவது பட்ட மளிப்பு விழாவில் இந்திய குடியரசு தலைவர் உரை நிகழ்த்தி மாணவர் களுக்கு ஊக்கம் அளிப்பார். மேலும் தங்க பதக்கம் பெறும் மாணவர்களுக்கு பதக்கங்களை வழங்குவார்.

இந்த ஆண்டு மொத்தம் 1,010 மாணவர்கள் பட்டம் பெறுகின்றனர். இதில் 568 பெண்கள், 442 ஆண்கள் ஆவர். இதில் 45 மாணவர்கள் (34 பெண்கள் 11 ஆண்கள்) தங்கப்பதக் கம் வென்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு 44 மாணவர்கள் முனைவர் பட்டம் பெறுகின்றனர். (இதில் 27 பெண்கள் மற்றும் 17 ஆண்கள்).

நேரில் பட்டம் பெறும் மாணவர் கள் மொத்தம் 771. இதில் 454 பெண் கள் மற்றும் 317 ஆண்கள் ஆகும்.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், 2009 ஆம் ஆண்டு இந்திய நாடாளுமன்றத்தில் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சியின்போது திருவாரூர் மாவட்டத் தில் அமைக்கப்பட்டது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம், 13 கல்வி புலன்களின் கீழ் 28 துறைகளைக்கொண்டு சிறந்து விளங் குகிறது. தேசிய தர மதிப்பீடு மற்றும் அங்கீகார கவுன்சிலின் (NAAC) ஆய் வில், 'ஏ ப்ளஸ்' (A+) தர அங்கீகாரத் தைப் பெற்றுள்ளது. தேசிய நிறுவ னங்களுக்கான தரவரிசைப் பட்டியலின் படி (NIRF), கடந்த மூன்று ஆண்டு களாக நூறு சிறந்த பல்கலைக்கழகங் களின் பட்டியலில் இடம்பிடித்துள்ளது.

மேலும், மத்திய அரசின் உயிரித் தொழில்நுட்பத் துறை, அறிவியல் மற் றும் தொழில்நுட்பத் துறை, இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சிக் கழகம், இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் போன்ற பல்வேறு ஆய்வு நிறுவனங் களிடமிருந்து பல்வேறு மானியங்க ளைப் பெற்று,

பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. பல்கலைக்கழகத்தின் ஆய் வுக்கான குறியீடான, எச் இன்டெக்ஸ் அளவுகோலில், 2025 ஆம் ஆண்டில் ஆகஸ்ட் மாதம் வரை 84 ஆக உயர்ந் துள்ளது.

தமிழ்நாடு மத்தியப் பல்கலைக் கழகம் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளில் சிறந்து விளங்குவதோடு கல்வியின் பலன் களை, இந்தியாவின் கிராமப்புறங் களை சென்று சேர்க்கும் பொறுப் புள்ள குடிமக்களை உருவாக்கி வருகின்றது.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை நகராட்சி டேனிஷ் மிஷன் துவக்கப் பள்ளியில் தமிழக முதல்வரின் விரிவாக்கப்பட்ட காலை உணவுத் திட்டத்தை உளுந்தூர்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஆ.ஜெ.மணிக்கண்ணன் நேற்று துவக்கி வைத்தார், இதில் நகராட்சி தலைவர் திருநாவுக்கரசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் மணிவண்ணன், நகராட்சி ஆணையர் புஸ்ரா, மாவட்ட திட்டக்குழு உறுப்பினர், நகர செயலாளர் டேனியல் ராஜ், முன்னாள் பேரூராட்சி தலைவர் ஜெயசங்கர், நகர மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அலுவலர்கள், பள்ளியின் தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் கழகத் தலைவர் மு .க .ஸ்டாலின் அவர்கள் நேற்று 26.8.2025 நகரப்பகுதிகளில் காலை உணவு திட்டத்தை துவக்கி வைத்தார். இதனை தொடர்ந்து பண்ருட்டி நகராட்சி முத்தையர் தொடக்க பள்ளி,கருணை பிரகாச வித்யசாலை துவக்கப்பள்ளி, ஏ.வி. நடுநிலை துவக்கப் பள்ளிகளில் , பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் க. இராஜேந்திரன் கலந்துகொண்டு மாணவ செல்வங்களுக்கு காலை உணவு திட்டத்தை வழங்கி மாணவச் செல்வங்களுடன் அமர்ந்து உணவு அருந்தி துவக்கி வைத்தார். மேலும் மூன்று பள்ளிகளில் துவங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் நகராட்சி ஆணையாளர் காஞ்சனா, சுகாதார அலுவலர் கிருஷ்ணராஜ், ஜெய்சங்கர், நகர தலைவர் ராஜா, நகர பொருளாளர் ராமலிங்கம், நகர மன்ற உறுப்பினர்கள் சாந்தி செந்தில், சோழன் மற்றும் என்.ஆர். குமார்,மாணவர் அணி அமைப்பாளர் பார்த்திபன், நகர தகவல் தொழில்நுட்ப அணி மோகன் மற்றும் கழக நிர்வாகிகள், நகராட்சி அதிகாரிகள், ஆசிரியர் பெருமக்கள், மாணவச் செல்வங்கள் கலந்து கொண்டனர்.